முன்னுரை:—

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே மூன்றாவது முறையாக சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறையின் 2008—2009 ஆம் நிதியாண்டிற்கான மானியக் கோரிக்கையின்மீது பேச வாய்ப்பளித்த தங்களுக்கு என் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழினத் தலைவரின் பொன் விழாவை கண்ட சட்டமன்றப் பேரவையில் ஒரு அமைச்சராக நான் பேச இந்த அரிய வாய்ப்பினை தந்திட்ட தமிழனத்தின் ஒரே தலைவர், ஈடு இணையற்ற தலைவர், ஒப்பற்ற தலைவர், நான் தந்தையாக வணங்கும் நமது முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு மீண்டும் என் நன்றியினையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே போல் எங்களை போன்ற அமைச்சர்களுக்கு கடின உழைப்பின் சின்னமாக, உந்துதலாக இருக்கும் கழகத்தின் தலைமகன் மட்டும் அல்ல எங்கள் குடும்பத்தின் தலைமகனாக நான் கருதும் பாசத்திற்கும், மரியாதைக்கும் உரிய மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அன்பு அண்ணன் தளபதியார் அவர்களுக்கும் என் வணக்கத்தையும், நன்றியினையும் தெரிவித்து என் உரையை தொடங்குகிறேன்.

## மானியக் கோரிக்கை உரை 21.4.2008

**பெண்கள் நலம் :–**

தென்னாப்பிரிக்க கறுப்பர் இனத்தின் விடுதலைக்காக போராடி வெற்றி பெற்ற தலைவர் நெல்சன் மண்டேலா கூறுகிறார்:–

சமுதாயத்தின் விளிம்பில் உள்ளவர்கள் மூன்று சாரார், அதாவது பெண்கள், குழந்தைகள், ஊனமுற்றோர் என இவர்களை மனதில் வைத்து எந்த அரசாங்கம் திட்டங்களை தீட்டுகிறதோ அதுவே ஒரு உன்னதமான அரசு, உயர்வான அரசு. அத்தகைய அரசு டாக்டர் கலைஞர் அரசு.

கடந்த ஆட்சி காலத்தில் காரணமே இல்லாமல் நிறுத்தப்பட்ட மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம் இன்று ஏழை எளிய பெண்களுக்கு அவர்களின் வாழ்வில் ஒளியேற்றிடும் அருமருந்தாக உள்ளது.

இத்திருமண நிதியுதவி 1989 ஆம் ஆண்டு மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் அப்போது ரூபாய் 5,000 ஆகவும், 1996 ஆம் ஆண்டு ரூபாய் 10,000 ஆகவும் இந்த ஆட்சி வந்தவுடன் 2006 ஆம் ஆண்டில் ரூபாய் 15,000 ஆகவும் உயர்த்தப்பட்டது.

தற்போது 2008–2009 ஆம் நிதியாண்டில் ரூபாய் 20,000/–ஆக உயர்த்தி வழங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார். ஏனைய திருமண நிதியுதவித் திட்டங்களான அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண உதவி திட்டம், டாக்டர் தர்மாம்பாள் விதவை மறுமண திருமண நிதியுதவி திட்டம், அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்களுக்கான திருமண நிதியுதவித் திட்டம் மற்றும் ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவை பெண்களின் மகள் திருமண நிதியுதவி திட்டங்களின்கீழ் 2007–2008 ஆம் நிதியாண்டில் ரூ.10,000/– இருந்த உதவித் தொகை ரூ.15,000/– ஆக உயர்த்தி, வழங்கப்பட்டு வருகிறது.

இத்திருமண உதவி திட்டங்களின் செலவினத்தை குறைப்பதற்கு மட்டுமல்ல சமுதாயத்தில் ஒரு மறுமலர்ச்சி ஏற்படுத்த வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு அறிமுகப்படுத்தப்பட்ட திட்டங்கள். தந்தை பெரியார் நம்புகின்ற பெண்ணியத்தை, சாதி, மதம் இல்லாத சமுதாயத்தை உருவாக்குகின்ற, ஊக்குவிக்கின்ற திட்டங்கள் ஆகும்.

இந்த திருமண உதவி திட்டங்களுக்கு இக்கழக அரசு கடந்த 2007 –2008 ஆம் ஆண்டு மட்டும் ரூபாய் 132.82 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இதுவரை 88,406 பெண்கள் பயன் அடைந்தனர் என்பதை தெரிவிக்க விரும்புகிறேன்.

1995 ஆம் ஆண்டு அதிமுக ஆட்சியில் நிறுத்தப்பட்ட தாம்பரம் அரசு இடைநிலை ஆசிரியர் பயிற்சிப் பள்ளி, இன்று நமது முதல்வர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு போதிய உட்கட்டமைப்பு வசதிகளை அமைத்து, மீண்டும் 2007 ஆம் ஆண்டு திறக்கப்பட்டு, இதன் வாயிலாக 40 ஆதரவற்ற கணவனால் கைவிடப்பட்ட சேவையில்லங்கள் மற்றும் அரசு குழந்தைகள் காப்பகங்களில் பயின்ற பெண்களுக்கு இலவசமாக ஆசிரியர் பயிற்சி வழங்கி வருகிறது.

தற்போது கிராமங்களிலிருந்து பெண்கள் அதிக அளவில் சென்னைக்கு பணிபுரிய வருவதால், பாதுகாப்போடு அதே சமயத்தில் குறைந்த வாடகையில் தங்குவதற்கு பணிபுரியும் பெண்கள் விடுதிகளின் தேவை அதிகரித்து வருகிறது. இதனை கருத்தில் கொண்டு மைய அரசுடன் இணைந்து சென்னை, சாலிகிராமத்தில் 500 பேர் தங்கும் வகையில் சுமார் ரூபாய் 13.13 கோடி செலவில் 5.52 ஏக்கர் நிலப் பரப்பில் 5 தொகுதிகளாக (Blocks) அமைக்கப்படவுள்ளது. இதற்கான ஆரம்ப கட்ட பணிகள் தொடங்குவதற்கு மாநில அரசு 2007–2008 ல் ரூபாய் 2 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

தமிழ் நாடு மகளிர் ஆணையத்திற்கு கொள்கை அளவில் தனி அதிகாரம் வழங்க இவ்வரசு முடிவு எடுத்ததன் அடிப்படையில், தமிழ் நாடு மாநில மகளிர் ஆணைய சட்டம் 2008 இந்த கூட்டத் தொடரிலேயே அறிமுகப்படுத்தப்படும். இதன் மூலம் "Statutory rights" வழங்கப்படவுள்ளது. எதிர்காலத்தில் பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் கொடுமைகள், காலதாமதம் இன்றி தீர்க்கப்பட வேண்டும் என்பதே இந்த சட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம், 26.10.2006 முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை தமிழகத்தில் 433 புகார்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. குடும்ப வன்முறை சட்டத்தின் வாயிலாக இந்தியாவிலேயே முதல் முறையாக தீர்ப்பு வழங்கப்பட்டது தமிழ்நாட்டில்தான். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதோ தமிழ்நாட்டு பெண்களுக்குத்தான் அதிக அளவில் அநீதி இழைக்கப்படுகிறது என தவறாக நினைக்க வேண்டாம். குடும்ப வன்முறை உலகளவில் எல்லா தரப்பு பெண்களுக்கும் எதிராக நடத்தப்படும் ஒரு வேதனையான விஷயம். தமிழ்நாட்டில் பெரியார் வழி வந்த திராவிட இனப் பெண்கள் நெஞ்சுரமும் தன்னம்பிகையும் உடையவர்களாக உள்ளதால்தான் எதிர்ப்புகள் மத்தியில் மனவலிமையோடு சட்டத்தின் உதவியை நாடுகிறார்கள்.

தற்போது குடும்ப வன்முறைச் சட்டப் பாதுகாப்பு அலுவலர்களாக மாவட்ட சமூக நல அலுவலர்களே செயல்படுகிறார்கள். இதற்கென்று 31 பாதுகாப்பு அலுவலர்கள்

**சென்னைக்கு இரண்டும், ஏனைய மாவட்டங்களில் தலா ஒரு அலுவலரும் நியமித்திட அரசாணை பிறப்பிக்கப்பட்டு, அவர்களை தேர்வு செய்வதற்கான பணிகள் நடந்து வருகின்றன. இன்னும் ஓரிரு மாதங்களில் அவர்கள் பணி நியமனம் செய்யப்படுவார்கள் என இந்த மாமன்றத்தில் தெரிவித்து கொள்ள விரும்புகின்றேன்.**

**இன்று உலக அளவில் 1000 ஆண்களுக்கு 995 அல்லது சரிசமமாக பெண்களின் எண்ணிக்கை இருக்கிறது. ஆனால் நமது இந்திய நாட்டில் 2001– ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, ஆண், பெண் விகிதாச்சாரம் எண்ணிக்கை 1000 ஆண்களுக்கு 933 பெண்கள் என்ற விகிதம்தான் உள்ளது. தமிழ் நாட்டு விகிதாசாரம் இந்திய விகிதாச்சாரத்தை விட அதிகமாக 1000 ஆண்களுக்கு 987 பெண்கள் என்றிருந்தாலும், குறிப்பாக தர்மபுரி, கிருஷ்ணகிரி, சேலம், நாமக்கல் மற்றும் தேனி ஆகிய மாவட்டங்களில் ஆண்/பெண் விகிதாச்சாரம் குறைவாக உள்ளது. கடந்த ஆண்டில் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து கருத்து பட்டறைகள், விழிப்பு உணர்வு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளது. எனினும் இவ்வாண்டு இந்த ஐந்து மாவட்டங்களில் சிறப்பு கவனம் செலுத்தி, எதிர்கால பெற்றோர்களான மாணவ மாணவியரை முன்நிறுத்தி "பெண் குழந்தை போற்றுதும்" என்ற தலைப்பில் புதிய முயற்சிகளை எடுக்க சமூக நலத் துறை ஏற்பாடு செய்துள்ளது.**

**தொட்டில் குழந்தைகளை பாதுகாக்க சிறப்பு குழந்தை நல மருத்துவரும், மேலும் அங்கு பணி புரியும் ஊழியர்களுக்கு ஊதிய உயர்வும் அளிக்கப்பட உள்ளது.**

**இத்திட்டம் தொடங்கி இன்றைய தேதி வரை 1595 குழந்தைகள் தத்து கொடுக்கப்பட்டு உள்ளனர். இதில் ஆண்கள் 202, பெண்கள் 1393 ஆகும்.**

**தொட்டில் குழந்தை திட்டம் போற்றுதலுக்குரியதோ அல்லது தூற்றுதலுக்குரிய திட்டமோ அல்ல. இத்திட்டம் இன்றைய காலச் சூழலில் ஒரு தற்காலிகத் தேவையாக இருக்க வேண்டும் என்பதே டாக்டர் கலைஞர் அரசுடைய எண்ணம்.**

**சிவகாமி அம்மையார் நினைவு பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 2001 முதல் 2006 வரை ஐந்தாண்டுகளில் ரூபாய் 175.48 கோடி நிதி முந்தைய அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டது.**

**தற்போது மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அரசில் 2006–2007 முதல் 2008–2009 வரை ஆண்டுதோறும் தலா ரூபாய் 75 கோடி வீதம் மொத்தம் ரூபாய் 225 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் பெண் குழந்தைகளின் பாதுகாப்பிலும்,**

**எதிர்கால வாழ்விலும் டாக்டர் கலைஞர் அரசு தான் அதிக அக்கறை கொண்டுள்ளது என தெளிவாகத் தெரிகிறது.**

**<u>ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம்</u>**

**ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் 1975 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டு வந்தாலும், ஒவ்வொரு முறையும் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சி புரியும் காலங்களில்தான் சிறப்பாக செயல்படுகிறது என்பது உண்மை. இத்திட்டத்தின் கீழ் 6 மாதம் முதல் 5 வயது வரை சுமார் 22 இலட்சம் குழந்தைகளும், சுமார் 5 இலட்சம் கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் பெண்களும் மற்றும் சுமார் 37 ஆயிரம் முதியோர்களும் பயன்பெற்று வருகிறார்கள்.**

**இந்தியாவில் முக்கியமாக 1 முதல் 2 வயது வரையுள்ள குழந்தைகள், கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் பெண்கள் மத்தியில் தான் ஊட்டச்சத்து குறைபாடு அதிகம் உள்ளதாக தெரிய வருகிறது. ஆதலால் தமிழ்நாட்டில்தான் 1 முதல் 2 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு இணை உணவோடு வாரம் ஒரு முட்டையும், முன்பருவ பள்ளி குழந்தைகளுக்கு வாரம் 3 முட்டையும் வழங்கப்படுகிறது.**

**வளரிளம் பெண்களுக்கு, கல்வியின் முக்கியத்துவம், சுகாதாரம், ஊட்டச்சத்தின் மேன்மை சமுதாய பொறுப்பை உணர்த்திடும் வகையில் முதன் முறையாக மாவட்டந்தோறும் பேரணிகள் நடத்தப்பட்டு வருகிறது. இதுவரை சென்னை, தஞ்சாவூர், திண்டுக்கல், மதுரை, கன்னியாகுமரி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் நடைபெற்றுள்ளது. மேலும் இப்பேரணிகள் மற்ற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படுவது மட்டுமல்லாமல் வருகின்ற ஆண்டில் வட்டார அளவிலும் நடத்தப்படும்.**

**தற்போது வட்டார அளவில் 30 வளரிளம் பெண்கள் வீதம் மொத்தம் 13,020 வளரிளம் பெண்களுக்கு இந்தாண்டு கணினி பயிற்சியும் அளிக்கப்படும்.**

**இன்றைய கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் பெண்கள் மத்தியில் குறைந்த விலையில் அதிக சத்துள்ள நமது ஊரிலேயே கிடைக்கும் கடலை, கீரை வகைகள், வெல்லம் போன்ற உணவுப் பொருட்களை அன்றாட உணவில் சேர்த்துக் கொண்டாலே ஊட்டச்சத்து குறைபாடுகளை களையலாம் என்ற விழிப்புணர்வு குறைவாகவே உள்ளது. எனவே இதனை பெண்கள் அறிந்து கொள்ள ஏடுகள், ஊடகங்கள் வாயிலாக விழிப்புணர்வு ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.**

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தின் கீழ் 2007- 2008 ஆம் ஆண்டில் ரூபாய் 450.05 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஏனைய மாநிலங்களுக்கு இத்திட்டத்தை செயல்படுத்துவதில் ஒரு முன்னோடி மாநிலமாக தமிழகம் சிறந்து விளங்குகிறது. மேலும், ஊட்டச்சத்து குறைபாட்டை வருகின்ற ஆண்டில் கணிசமாக குறைப்பதற்கு சிறப்பு முயற்சிகள் எடுக்கப்படும்.

<u>புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவு திட்டம் :–</u>

மதிய சத்துணவு திட்டத்திற்கு 2007–2008 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 781.44 கோடியும், 2008–2009 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 820 கோடியும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இத்திட்டத்தின் வாயிலாக 2 முதல் 15 வயது வரை உள்ள 74,69,473 நபர்கள் பயன்பெறுகிறார்கள்.

சத்துணவு திட்டத்தின் கோஹினூர் வைரம், முதல்வர் அறிமுகப்படுத்திய வாரம் மூன்று முட்டை வழங்கும் திட்டம். வாரந்தோறும் 2 கோடியே, 10 லட்சத்து, 84 ஆயிரத்து 57 முட்டைகள் விநியோகம் செய்யப்படுகின்றன.

முட்டை உற்பத்தி செய்யப்படும் நாமக்கல்லிலேயே எந்த அளவு தரமாக, நேரம் தவறாமல் வாரம் மூன்று முறை அங்குள்ள பயனாளிகளுக்கு வழங்கப்படுகிறதோ அதே அளவு தமிழகத்தின் தென்கோடியில் உள்ள கன்னியாகுமரியிலும், மலை உச்சியில் உள்ள ஊட்டி, கொடைக்கானல், ஜவ்வாது மலைகளிலுள்ள பள்ளிகளுக்கும் காலந்தவறாமல் சிறந்த முறையில் தரமான முட்டைகள் வழங்கப்படுகின்றன.

இதை நான் ஏன் இவ்வளவு விரிவாக கூறுகின்றேன் என்றால் முட்டை எளிதாக உடைய கூடிய பொருள், அழுகக்கூடிய பொருள், முட்டை வழங்கும் திட்டத்தை வியந்து பார்க்கும் போது நான் ஒரு புத்தகத்தில் படித்த விவரம் நினைவுக்கு வருகிறது. எந்த புதிய திட்டத்திற்கும் மூன்று படிகள் :–

முதலாவது படி – Planning - திட்டமிடுதல்

இரண்டாவது – Implementation – ஆணையிடுதல்

மூன்றாவது – Delivery - கள அளவில் செயல்படுத்துவது.

பைபிளில் (Bible) மோசஸ் திட்டமிட்டு 10 கட்டளைகளை கடவுளிடம் பெற்று வந்தாலும், இறுதிவரை அவரால் அதை செயல்படுத்த முடியவில்லை எனவும், கள அளவில் மாற்றத்தை கொண்டுவருவது எவ்வளவு கடினம் என அந்த புத்தகத்தில் எழுதப்பட்டது. ஆனால் நமது முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் எதிர்கால தமிழகத்தை தாங்கி பிடிக்க போகின்ற மாணவ மாணவியருக்கு , வாரந்தோறும் 2 கோடிக்கு மேற்பட்ட முட்டைகளை சேதாரம்

இல்லாமல் சிறப்பாக வழங்குவது நமது முதல்வர் அவர்கள் அரசின் நிர்வாகத் திறமைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது எனக் கூறினால் மிகையாகாது.

நமது முதல்வர் அவர்களின் ஆட்சியில்தான் இன்று ஆரம்பப் பள்ளிகளில் சேர்க்கை அதிகரித்து, மாணவர்கள் தவறாமல் பள்ளிக்கு சென்று படிக்கவும், இடையில் பள்ளிப் படிப்பை நிறுத்தாமல் இருக்கவும் மாணவர்களிடத்திலும், பெற்றோர்களிடத்திலும் ஒரு முன்னேற்ற நிலை ஏற்பட்டுள்ளது. ஆரம்ப பள்ளிகளில் 2002–2003 ஆம் ஆண்டில் இடை நீக்கல் (Drop out ) 12 சதவீதம் இருந்தது. நிதியாண்டு 2006–2007 ல் 2 சதவீதமாக குறைந்தது. இதற்கு முக்கிய காரணங்களில் ஒன்று மதிய சத்துணவு திட்டத்தில் நமது முதல்வர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட வாரம் மூன்று முட்டை வழங்கும் திட்டமாகும். இதை நான் கூறவில்லை, 2007 ஆம் ஆண்டில் நடந்த தணிக்கைக் குழு இதனை பாராட்டி எழுதியுள்ளது என்பதனை பெருமையோடு அவையில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

**ஊனமுற்றோர் நலன்**

ஊனமுற்றோர் ஏனைய மக்களோடு ஒருங்கிணைந்து செயல்படவேண்டும், கல்வி பயில வேண்டும் என்பதற்காக இந்தியாவிலேயே முதன் முறையாக தமிழகம் தான் காதுகேளாத குழந்தைகளுக்கும், மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கும், குறைபாடுகளை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து, ஆரம்ப பயிற்சி மையங்கள் மூலம் சிறப்பு பயிற்சி வழங்கப்படுகிறது. இச்சிறப்பு பயிற்சி மையங்கள் அனைத்து மாவட்டங்களில் தலா ஒரு பயிற்சி மையம் வீதம், தொண்டு நிறுவனங்களோடு இணைந்து சிறப்பாக செயல்படுகிறது.

10ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு பயிலும் பார்வையற்ற மாணவ, மாணவியருக்கு பாடங்கள் பதிவு செய்யப்பட்ட ஒலிநாடாக்கள் மற்றும் ஒலிநாடா இயக்கிகள், செவித்திறன் குறைபாடு உடையவர்களுக்கு இலவச B.Com, BCA படிப்பு, பார்வையற்ற அரசு மேல் நிலைப் பள்ளிகளில் “பேசும் மென்பொருள்” அடங்கிய கணினி, ஊனமுற்ற மாணவ, மாணவியருக்கு மோட்டார் பொருத்தப்பட்ட மூன்று சக்கர வாகனம், தமிழை பயிற்று மொழியாக கொண்டு 10 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் மாநில மற்றும் மாவட்ட அளவில் முதல் மூன்று நிலைகளில் மதிப்பெண் பெறும் பார்வையற்ற மாணவ மாணவியருக்கு ரொக்க பரிசு ஆகிய திட்டங்கள் அனைத்தும் 2006 ஆம் ஆண்டில் டாக்டர் கலைஞர் அவர்களின் ஆட்சியில் அறிமுகப்படுத்திய புதிய திட்டங்களாகும்.

ஊனமுற்றோர்களுக்கு வேலை வாய்ப்பில் 3 சதவீத இட ஒதுக்கீட்டை முழுமையாக செயல்படுத்துவதில் இவ்வரசு உறுதியாக உள்ளது. பட்டதாரி ஆசிரியர் படிப்பு முடித்து வேலையின்றி இருந்த பார்வையற்றோரின் வேண்டுகோளை ஏற்று, 200 பார்வையற்றோர்களுக்கு 2007 ஆம் ஆண்டில் சிறப்பு இனமாகக் கருதி பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் வழங்க ஆணையிட்டது நமது டாக்டர் கலைஞர் அவர்கள் அரசு தான்.

தமிழகத்தில் இதுவரை 5 இலட்சத்து, 7 ஆயிரத்து இருநூற்று ஐம்பத்தெட்டு ஊனமுற்றோருக்கு தேசிய அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. நமது முதல்வர் டாக்டர் கலைஞர் அரசு மேற்கொண்ட முயற்சி காரணமாக கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டுமே 4 லட்சத்து 41 ஆயிரத்து, 981 தேசிய அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது. கடந்த ஆட்சி காலத்தில் ஐந்து ஆண்டுகளில் வெகு குறைவாக 1 லட்சத்து 28 ஆயிரத்து 277 நபர்களுக்கு மட்டும் அடையாள அட்டை வழங்கப்பட்டது.

ஊனமுற்றோர் மற்றும் நலிந்தோர் மீது நமது முதல்வர் காட்டுகின்ற பரிவே தனித்துவமானது. It is very unique.

பொதுவாக தொழுநோயாளிகளை ஒரு காலக் கட்டத்தில் அதிக அளவு ஆலயங்களின் வாசலில் அமர்ந்திருப்பது வழக்கம். கடவுளின் கண் பார்வை அவர்கள் மேல்பட்டதோ இல்லையோ ஆனால் கருணையே வடிவமான நமது டாக்டர் கலைஞர் அவர்களின் பார்வை பட்டதால் தான் 1971 ஆம் ஆண்டு உலகத்தில் வேறு எங்கும் இல்லாத திட்டமான தொழுநோயாளிகளுக்கான 10 மறுவாழ்வு இல்லங்களை தமிழ் நாட்டில் அமைத்தவர் நமது முதல்வர் அவர்கள்.

2007 ஆம் ஆண்டில், 25 கோடி ரூபாய் அளவில் மனவளர்ச்சி குன்றியோர்க்காகவே கூடுதலாக ஒதுக்கீடு செய்தவர் நமது முதல்வர். இந்த சிறப்பு ஒதுக்கீட்டால் 30,000 மனவளர்ச்சி குன்றியோர் வயது வரம்பில்லாமல், வருமான உச்ச வரம்பில்லாமல் மாதந்தோறும் ரூ.500/- பெற்று வருகின்றனர்.

இந்த ஆண்டு முதன் முறையாக Duchenne Muscular Dystrophy (DMD) என்ற ஒருவிதமான தசை நோய்க்கு பாதிக்கப்பட்டோருக்கு மாதந்தோறும் 500 ரூபாய் உதவிப் பணமாக வழங்க உத்தரவிட்டார் நமது முதல்வர் அவர்கள். நான் இதன் விவரத்தை இன்னும் கொஞ்சம் விரிவாக உறுப்பினர்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

இந்த தசை நோய் ஆண்களை மட்டுமே தாக்கும் மரபணு சார்ந்த நோய். இந்த நோயால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் முதலில் 6 முதல் 8 வயது வரை கைகள், கால்களை உபயோகிக்க முடியாமல் இருப்பர். பின்னர் உடல் தசைகள் படிப்படியாக வலுவிழந்து, இறுதியாக சுவாசிப்பதில் சிரமம் ஏற்பட்டு 20 முதல் 25 வயதில் தங்கள் நிலையை உணர்ந்தவாறே மரணம் அடையும் ஒரு கொடுமையான நோய்.

இந்த நோயால் பாதிக்கப்பட்டோருக்கு உதவித் தொகை வழங்க முடிவெடுக்கப்பட்டபோது, முதலில் ரூபாய் 50 இலட்சம் தான் ஒதுக்கப்பட்டது. அப்படி 50 லட்சம் மட்டும் ஒதுக்கப்பட்டால், குறிப்பிட்ட சில நபர்களுக்கு மட்டும் தான் உதவித் தொகை வழங்க முடியும். பாதிக்கப்பட்ட அத்தனை பேருக்கும் வழங்க முடியாது எனக் கருதி தாயுள்ளம் கொண்ட நம் முதல்வர் அவர்கள் Standing Finance Committee கூட்டத்தில் பேசும் போது ரூபாய் 50 இலட்சம் என்ற உச்சவரம்பை எடுத்துவிட்டு, தமிழ் நாட்டில் இந்நோயினால் பாதிக்கப்பட்ட அத்தனை பேருக்கும் உதவித் தொகை வழங்கிட வேண்டும் என்று உத்தரவிட்டார்கள்.

மாண்புமிகு முதல்வர் அவர்களே, தாங்கள் ஐந்தாம் முறையாக முதல்வராக பொறுப்பேற்றிருப்பது, வேறு எந்த திட்டத்தை நிறைவேற்றுவதற்கோ இல்லையோ இது போன்ற மனிதாபிமான திட்டங்களை நிறைவேற்றத்தான் என மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த ஆட்சியில் 5 ஆண்டுகளில் ஊனமுற்ற துறையின் நிதி ஒதுக்கீடு மொத்தம் ரூபாய் 143.97 கோடியாகும். இந்த ஆட்சி பொறுப்பேற்ற நாள் முதல் இந்த நிதியாண்டு வரை ரூ.203.13 கோடி. ஊனமுற்றோர்களும் தமிழக பொருளாதார வளர்ச்சியில் பயனடைய வேண்டும் என்ற முனைப்போடு செயல்படுகிறது டாக்டர் கலைஞர் அவர்களின் அரசு.

சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறையில் 1,21,475 பேர் பணிபுரிந்து வருகிறார்கள்.

வேலை பணி நியமன தடை சட்டத்தை நீக்கி, சத்துணவு மற்றும் குழந்தைகள் மையங்களில் 2 ஆண்டுகளில் ஏழை, ஆதரவற்ற, விதவை பெண்களுக்கு முன்னுரிமை தரப்பட்டு 29,497 காலியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. கடந்த ஆட்சியில் பதவி உயர்வு வழங்காமல் இருந்தவர்களில் 1051 நபர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டது மட்டுல்லாமல் மேலும் 31 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணை வழங்கப்பட்டது, நமது முதல்வர் டாக்டர் கலைஞர் ஆட்சியில் தான்.

இதிலிருந்து வேலை வாய்ப்புகளை உருவாக்குவதும், அரசு ஊழியர்களை அக்கறையோடு கவனித்துக் கொள்வதிலும் முதன்மையானவர் நமது முதல்வர் அவர்களே.

அரவாணிகள் நலம்

அரவாணிகள் நலம் 2008–2009 ஆம் ஆண்டு மேதகு ஆளுநர் அவர்கள் உரையில் அறிவித்தபடி அரவாணிகளுக்கான நல வாரியம் அமைக்கப்பட்டுள்ளது. <u>ஓய்வூதிய திட்டங்கள்</u>

தமிழகத்தில், வயது முதியோர், ஆதரவற்ற விதவைகள் ஆகியோருக்கு தமிழக அரசு ஓய்வூதிய திட்டங்களை மிகச் சிறப்பாக செயல்படுத்தி வருகிறது.

முக்கியமாக தேசிய முதியோர் உதவித் தொகைத் திட்டம் என்பது இந்திராகாந்தி முதியோர் உதவித் தொகை தேசிய திட்டம் என பெயரிடப்பட்டு, முன்னாள் பாரதப் பிரதமர் இந்திராகாந்தி அம்மையார் பிறந்த நாளன்று தமிழ் நாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் முதியோர் உதவித் தொகை பெறுவதற்கு ஆதரவற்றவராக இருக்க வேண்டும் என்ற நிபந்தனை தளர்த்தப்பட்டு, 65 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட, வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பத்தைச் சார்ந்த அனைவருக்கும் முதியோர் உதவித் தொகை 01.08.2006 முதல் ரூபாய் 200/–லிருந்து ரூபாய் 400/– ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் தற்போது பயனாளிகளின் எண்ணிக்கை 14,46,804 ஆகும். கடந்த இரண்டு ஆண்டுகளாக கூடுதலாக 2,49,181 முதியோர்கள் உதவித் தொகை பெற்று வருகிறார்கள்.

கடந்த காலத்தில் திரைப்படங்களில் பெண்களை புகழ்ந்து போற்றி பாடிய ஒரு முதல்வரை பெற்றிருந்தாலும், பெண்ணே முதல்வராக இருந்திருந்தாலும், பெண்களின் வளர்ச்சியில், முன்னேற்றத்தில் அக்கறை உடையவர் நமது முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தான்.

பெண்களின் துணிவுக்கு உதாரணமாக விளங்கிய கற்புக்கரசி கண்ணகி சிலையை மீண்டும் நிறுவியதாகட்டும், பெண்களுக்கு சொத்துரிமை வழங்கியதாகட்டும், மகளிர் சுய உதவிக் குழு திட்டமாகட்டும் என இதை போல பல உதாரணங்களை நான் அடுக்கிக் கொண்டே போகலாம். பெண்களின் உயர்வுக்காகப் பாடுபடும் அந்த முயற்சியை தொடர்ந்து இன்றளவும் செய்து கொண்டிருக்கின்றார் நமது முதல்வர். அதிலும் முத்தாய்ப்பானது, முக்கியமானது பாராளுமன்றத்திலும், சட்டமன்றத்திலும் பெண்களுக்கு 33 சதவீதம் இட ஒதுக்கீடு வழங்கிட வேண்டும் என்று

வலியுறுத்தி, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு சமூக நலத் துறை வாயிலாக நமது முதல்வர் அவர்கள் 16.06.2007 ஆம் நாளன்று கடிதம் எழுதியுள்ளார். உறுதியாக 33 சதவீதம் இட ஒதுக்கீடு நமது முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலில் சட்ட வடிவம் பெறும் என்பது நிச்சயம்.

முடிவுரை :

ஐந்தாவது முறையாக நமது முதல்வர் தமிழகத்தின் உயர்வுக்காக பாடுபட்டு கொண்டிருக்கும் இத்தருணத்தில் அந்த பணியில் எனக்கும் ஒரு சிறிய இடம் உள்ளது என நினைக்கும்போது மனம் நெகிழ்கிறது, பெருமிதம் கொள்கிறது. நமது முதல்வரை உலக தலைவர்களுக்கு இணையாக ஒப்பிட்டு உயர்த்தி பலர் மேடைகளிலும், இந்த அவையிலும் பேசியதை தான் அறிந்துள்ளேன். எனக்கோ சுமார் 2500 ஆண்டுகளுக்கு முன்பே கி.மு. 2 ஆம் நூற்றாண்டு ஆண்டில் இந்தியாவை ஆண்ட அசோக சக்கரவர்த்தி போன்ற முதல்வரை நாம் பெற்றுள்ளோம் என கருதுகின்றேன். இதனை வெளிப்படுத்துவதற்கு முக்கிய காரணம் அசோகரின் 6 வது கற்சாசனத்தில் எழுதப்பட்ட சொற்றொடரை இங்கு படிக்க விரும்புகின்றேன். அசோகர் கூறுவதாவது "at all times, whether I am eating, or at home, or at the cattle shed or in my carriage , or in my gardens – wherever I may be, my informants keep me in touch at public business. Thus everywhere I transact business" - "அதாவது எல்லா தருணங்களிலும் நான் உண்ணும் போதும், வீட்டில் இருக்கும் போதும், தொழுவத்தில் இருக்கும்போதும், பயணிக்கும் போதும், தோட்டத்தில் இருக்கும்போதும் எங்ருந்தாலும் தொடர்ந்து என்னுடைய அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டே சமுதாயத்திற்காக பணிபுரிந்து கொண்டிருக்கின்றேன்" என்று அசோக சக்கரவர்த்தி கூறுகிறார். அதே போல நமது முதல்வரும் இல்லத்தில் இருந்தாலும் சரி, கோட்டையில் இருந்தாலும் சரி, அரசு நிகழ்ச்சியில் இருந்தாலும் சரி, அண்ணா அறிவாலயத்தில் இருந்தாலும் சரி, முரசொலி அலுவலகத்தில் இருந்தாலும் சரி, எங்கிருந்தாலும் அத்தனை நேரமும் அரசு அதிகாரிகளையும், அமைச்சர்களையும் தம் தொடர்பிலேயே வைத்துக் கொண்டு தமிழ் நாடு, தமிழ் மக்கள் என்றே பணிபுரிந்து வரும் ஒரு உன்னத முதல்வராக அசோக சக்கரவர்த்திக்கும் மேலாக "தமிழினத்தின் ஒரே சக்கரவர்த்தியாக" அவரை நான் காண்கிறேன் என்று கூறிக் கொள்வதில் பெருமைப்படுகிறேன்.

அத்தகைய முதல்வரின் வழிகாட்டுதலில், ஒரு காலக்கட்டத்தில் உதவித் தொகை வழங்குவதும், உபகரணங்களை வழங்குவதும் மட்டுமே சமூக நலத் துறை, என்ற நிலை

**மாறி இன்று சமுதாயத்தின் விளிம்பில் உள்ளவர்களுக்கு கல்வி, வேலை வாய்ப்பையும் வழங்கி, அவர்களையும் தன்னம்பிக்கை உடையவராக மாற்றும் ஒரு துறையாக இத்துறை ஒரு புதிய பரிமாணத்தை பெற்றுள்ளது. அதாவது நமது முதல்வர் விளைச்சலுக்கு**

**'விதை நெல்லும் தருவார், உண்பதற்கு உணவையும் தருவார். இனிவருங்காலங்களிலும் சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை இன்னும் சிறப்பாக செயல்படும் என உறுதியளிக்கிறேன். எனவே 332 வெட்டு தீர்மானங்களை உறுப்பினர்கள் திரும்ப பெற்றுக்கொண்டு சமூக நலத் துறை மானியக் கோரிக்கையை ஏற்று கொள்ளுமாறு பேரவைத் தலைவரின் வாயிலாக கேட்டுக் கொள்கின்றேன்.**